# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8075841

C

1. District மாவட்டம் : கடலூர் | PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு | Year: ஆண்டு 2021 | FIR No. மு.த.அ. எண் 09/2021 | Date நாள் 22.09.2021

2. (i) Act சட்டம் The Prevention of Corruption — Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from நாள் முதல் 15.09.2021 — Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு — Time from நேரம் முதல் 17.00 hrs — Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 22.09.2021 — Time நேரம் : 0700 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - II — Time நேரம் : 0700 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — கணினி தட்டச்சு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 75 கி.மீ. தென்மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி வட்டாட்சியர் அலுவலகம், விருத்தாசலம்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S :-- District : --
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் P.அருண் — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் R.பழனி
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 23 — (d) Nationality நாட்டினம் இந்தியன் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் ---
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் --- — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் விவசாயம் — (g) Address : முகவரி 165/10, அண்ணா நகர், K.K.ரோடு, விருத்தாசலம், கடலூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   **சிவக்குமார், Record Clerk, வட்டாட்சியர் அலுவலகம், விருத்தாசலம்**

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   **வாதியால் தாமதம்**

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u>

நான் இன்று **22.09.2021** ஆம் தேதி காலை **07.00** மணிக்கு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, நிலையம் ஆஜரான கடலூர் மாவட்டம், விருத்தாசலம், K.K.ரோடு, **165/10**, அண்ணா நகர் என்ற முகவரியில் வசிக்கும் பழனி மகன் P.அருண் என்பவர், புகார் மனுவினை என்னிடம் கொடுத்தார். அந்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு : அனுப்புனர் P. அருண், (வயது 23), த/பெ R.பழனி, 165/10, அண்ணா நகர், K.K.ரோடு, விருத்தாசலம், கடலூர் மாவட்டம். செல் : **9943236448.** பெறுநர் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு பிரிவு, கடலூர். அய்யா, நான் கடலூர் மாவட்டம், விருத்தாசலம், K.K.ரோடு, 165/10,அண்ணாநகர் விலாசத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் BE (Mechanical)

(தொடர்ச்சி பக்கம்–3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Tr. S. Thiruvangadam, Inspector of police, VACB, Cud, to take up the Investigation / Refused Investigation / transferred to PS.......................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P. Arun
22/09/2021

S. Mala 22/09/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
22.09.2021 at 09:00 hrs.

Name: பெயர் S. MALA.
Rank: நிலை ............ No. எண் ............
Inspector of police,
VACB, Cuddalore

படித்துள்ளேன். என்னுடைய அப்பா பழனி அவர்கள் கடந்த 04.08.2020 அன்று இறந்துவிட்டார். என்னுடைய அம்மா பெயர் ராணி. எனக்கு இரண்டு அக்காக்கள் உள்ளனர். அவர்களுக்கு திருமணம் ஆகிவிட்டது. எங்க அப்பா பழனி பெயரில் விருத்தாசலம் தாலுக்கா, குப்பநத்தம் கிராமத்தில் சுமார் 2 1/2 ஏக்கர் விவசாயம் நிலம் இருந்தது. அந்த நிலத்தை 2019 ஆம் வருடம் என்னுடைய பெயரில் எங்க அப்பா தானசெட்டில்மெண்ட் செய்துவிட்டார். எங்க அப்பாவிற்கு என்னுடைய அம்மா ராணி இரண்டாவது மனைவி ஆவார். எங்க அப்பா பெயரில் இருந்த சொத்துக்களை என்னுடைய பெயரில் தானசெட்டில்மெண்ட் செய்ததை எதிர்த்து என்னுடைய அப்பாவின் முதல் மனைவி பார்வதி அவர்கள் விருத்தாசலம் நீதிமன்றத்தில் வழக்கு O.S.No.256/2020 தொடர்ந்தார். வழக்கு விசாரணைக்கு எங்கள் தரப்பில் ஆஜர்படுத்துவதற்காக, என்னுடைய பெயரில் உள்ள நிலங்களுக்கு 1985 ஆம் வருடம் முதல் உள்ள சிட்டா, அடங்கல், UDR A ரிஜிஸ்டர் ஆகியவற்றில் நகல்களை கேட்டு விருத்தாசலம் வட்டாட்சியர் அலுவலகத்தில் கடந்த 25.06.2021 அன்று என்னுடைய தயார் பெயரில் விண்ணப்பித்தேன். விண்ணப்பத்துடன் விருத்தாசலம் வருவாய் வட்டாட்சியருக்கு, விருத்தாசலம் நீதிமன்றம் வழங்கிய கடிதத்தையும் இணைத்திருந்தேன். விண்ணப்பித்து இரண்டு மாதங்களுக்கு மேல் ஆகியும் நான் கேட்ட ஆவணங்கள் கிடைக்க பெறாததால், 15.09.2021 ஆம் தேதி மாலை 05.00 மணிக்கு விருத்தாசலம் வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள Record Room–க்கு சென்று அங்கிருந்த Record Clerk சிவக்குமார் என்பவரை சந்தித்து நான் கேட்டிருந்த ஆவணங்கள் குறித்து கேட்டேன். அப்போது அவர் “ விண்ணப்பம் செய்துவிட்டு போய்விட்டால் தானா சிட்டா கிடைத்துடுமா, அதுக்கு செலவு செய்யனும், நீ கேட்கிற சிட்டா எல்லாம் பதினைந்து வருஷத்துக்கு முன்னாடி உள்ளது, ரூ.1,500/– கொடுத்தால் தான் நீ கேட்கிற சிட்டா எல்லாம் கொடுக்க முடியும் ” என்று சொன்னார். அதற்கு நான், அவரிடம் “ எங்க அப்பா இறந்துவிட்டதால் கஷ்டமா இருக்கு, இப்ப என்னிடம் பணம் இல்லை, பணத்தை நான் ஏற்பாடு செய்துவிட்டு கொடுக்கிறேன்” என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் நான் வீடு வந்து யோசித்து பார்த்ததில் பணம் கொடுத்து ஆவணங்களை வாங்க வேண்டாம் என முடிவு செய்தேன். என்னுடைய நிலத்தில் வேலை இருந்ததால் இன்று 22.09.2021 தங்களிடம் புகார் செய்கிறேன். மேலும் Record

Clerk சிவக்குமார், என்னிடம் கேட்ட பணம் ரூ.1,500/–த்தை கொண்டு வந்துள்ளேன் என்பதையும் தெரிவித்து கொள்கிறேன். இப்படிக்கு, (ஒப்பம்) P.Arun 22/09/2021. அய்யா, மேற்படி வாதியின் புகார் மனுவை நான், **இன்று 22.09.2021** ஆம் தேதி காலை 07.00 மணிக்கு பெற்றேன். வாதியின் புகாரில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டின் உண்மைதன்மை பற்றி விசாரித்ததில் குற்றச்சாட்டு உண்மையென தெரியவருகிறது. மேலும் புகாரில் கூறப்பட்டுள்ள குற்ற அலுவலரின் நடத்தை பற்றி விசாரிக்க குற்றச்சாட்டில் முகாந்திரம் இருப்பது தெரியவருகிறது. எனவே புகாரின் மீது நடவடிக்கை எடுக்கும்பொருட்டு உத்தரவுபடி நான், இன்று **22.09.2021** ஆம் தேதி காலை **08.30** மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 09/2021, U/s 7 Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி வழக்கு பதிவு செய்தேன். மேலும் உத்திரவுபடி வழக்கு கோப்பினை மேல் நடவடிக்கைக்காக கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.S.திருவேங்கடம் அவர்கள் வசம் ஒப்படைத்தேன். இதன் அசலை வாதி கொடுத்த புகார் மனுவுடன் இணைத்து Honourable Chief Judicial Magistrate cum Special Judge, Cuddalore அவர்களுக்கும், இதர நகல்களை உரிய அதிகாரிகளுக்கும் பணிந்து சமர்ப்பிக்கிறேன்.

S. Elala
22/09/2021.
Inspector of police,
V&AC, CUDDALORE.